**CHURCH OF THE IMMACULATE CONCEPTION**
No.9, Jalan Gereja, 80100, Johor Bahru, Johor, Malaysia.
Tel: +607-224 3034/8490 Fax: +607-2261794
Email: office@cicjb.org Website: www.cicjb.org

கிறிஸ்துவில் அன்புக்குறியவர்களே, இறை இயேசுவில் அன்பின் வாழ்த்துகள்

நமது ஆயர் கடந்த செப்டம்பர் 9, 2020 அன்று முக்கிய அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளார். அதில் முக்கிய அம்சமாக மீட்புநிலை நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை செயல் அறிக்கையின் படி, நம் தேவாலயத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு ஒரு சில தளர்வுகள் நமக்கு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் மலாக்கா ஜோகூர் மறைமாவட்டத்தின் கீழ் இருக்கும் அனைத்து பங்குகளும் தங்களுடைய பங்கு பாதுகாப்பு அம்சங்களை நினைவில் கொண்டு அதற்கேற்ப தரச்செயல்பாடுகளை அமைத்து கொள்ளலாம். ஆனால் அவை அனைத்தும் மறைமாவட்டத்தின் தரச்செயல்பாட்டு கட்டுபாடுகளை அடிப்படையாக கொண்டு வேண்டும்.

**<u>மறைமாவட்டம் மற்றும் பங்கின் புதிய மீட்புநிலை நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை செயல் அறிக்கை</u>**

அனைவரின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு, கொடுக்கப்பட்டிருக்கும் அனைத்து செயல்பாடுகளையும் கட்டாயம் அனைவரும் கடைபிடிக்க வேண்டும்

- வயது கட்டுபாடு – ஏழு (7) வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து விட்டு திருப்பலியில் கலந்து கொள்ளலாம். இருப்பினும் மருத்துவர்களின் ஆலோசனையின் படி, ஏழு வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளும் முதியோர்கள் (உடல் நலக்குறைவு / கடுமயான நோய் உள்ளவர்கள்) திருப்பலியில் பங்கெடுக்க இயலாது என்று ஆலோசனை கூறப்படுகின்றது.
- இனி உள்நாட்டவரும் வெளிநாட்டவரும் திருப்பலியில் கலந்து கொள்ளலாம். அனைவரும் தங்கள் பெயரை அதிச தலைவர் / பங்கு அலுவலகம் / முகப்புத்தகம் / பங்கு அகப்பக்கம் வாயிலாக தங்கள் வருகையை முன்பதிவு செய்யலாம். பெயர் முன்பதிவு மிக மிக அவசியம். உங்கள் வருகையின் எண்ணிக்கையை நாங்கள் முன்பே அறிந்தால் மட்டுமே அதற்கு தகுந்தாற்போன்று இருக்கைகளை நாங்கள் தயார் படுத்த முடியும். அதுமட்டும் அல்லாமல், மற்றவர்களுக்கும் வாய்ப்பு தர முடியும். உங்கள் பெயர்களை முன் பதிவு செய்தவுடன் உங்கள் வருகையை உறுதிபடுத்தி, உங்கள் மின் அஞ்சல் முகவரிக்கு மின் அஞ்சல் அனுப்பி வைக்கப்படும்.
- திருப்பலிக்கு வருபவர்கள் கருத்தில் கொள்ள வேண்டியவை:
  - ✓ கோவிட் 19 நோயின் அறிகுறி இல்லாதவராக இருக்க வேண்டும்
  - ✓ கோவிட் 19 நோய் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டிருக்கக் கூடாது.
  - ✓ திருப்பலிக்கு வருபவர்கள் கட்டாயம் முகக்கவரி அணிந்திருக்க வேண்டும்.
  - ✓ அனைத்து பாதுகாப்பு அம்சங்களையும் கடைபிடிக்க வேண்டும். மேலும் 1 மீட்டர் சமூக இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக உட்காருதல், ஒருவர் பின் ஒருவர் நடத்தல், வரிசையில் நிற்றல்.

அனைத்து தரச்செயல்பாட்டு கட்டுபாடுகளையும் திருப்பலியில் கலந்து கொள்வபர்கள் கடைபிடிக்க வேண்டும். கோவிட் 19 நோய் இன்னும் நமக்கு பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கிறது. ஆகவே அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்வது நம் கடமை. வெள்ளம் வரும் முன் அணை போடுவதே நலம். இந்நோயை முற்றிலும் அகற்ற, நாம் முதலில் அனைத்து பாதுகாப்பு அம்சங்களையும் கடைபிடிக்க வேண்டும். இறைவனின் அருள் நம்முடன் என்றும் இருக்கும்.

உங்களுக்கு இதனைக் குறித்து ஏதாவது சந்தேகங்கள் / கேள்விகள் இருந்தால், ஆலய தலைவர் (Miss Iris) / தமிழ் அப்போஸ்தலர் குழு தலைவரைத் தொடர்பு கொள்ளவும்.

இறுதியாக, உங்கள் அனுதின செபத்தில் அனைவரின் பாதுகாப்புக்காகவும் தற்போதைய சூழ்நிலை மாற வேண்டும் என்று செபியுங்கள்.

நன்றி. இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக

அன்புடன்

Fr. E

அருட்தந்தை எட்வட் ராயப்பன்
அமலோற்பவ மாதா பங்கு குருவானவர்

CHURCH OF THE IMMACULATE CONCEPTION * JOHOR BAHRU *